**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் O.S.No.234/2019 P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளா் திரு.D.கோவா்த்தனகிரி, என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆனந்தகிருஷ்ணன் | தொழில் | |
| த.பெ. | | மதம் | |
| கிராமம் | | சாதி | |
| வயது | | வட்டம் | |

**முதல் விசாரணை - 08.07.2022**

நான் இந்த வழக்கில் வாதி. இன்று இந்த வழக்கில் கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 3 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதி தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. Original Statement of accounts of AK Construction – Ex.P.1.
2. Original Statement of accounts of Mayura Foundations – Ex.P.2.
3. 17.11.2017 - Office copy of Legal Notice issued onbehalf of Plaitniff to defendant with proof of posting – Ex.P.3.

தாவாப்படி தீா்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞா் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**O.S.No.234/2019** **P.W.1-அனந்தகிருஷ்ணன்** **26.08.2022**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் Building Contract தொழில் செய்து வருகிறேன். எனக்கு பிரதிவாதியை எப்படி தெரியும் என்றால் 2012, 2013ம் ஆண்டில் இருந்து தெரியும். பிரதிவாதி மொத்த அரிசி வியாபாரம் செய்து வந்ததால் அவரிடம் அரிசி வாங்குவதன் மூலம் எனக்கு தெரியும். எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே Business Transaction இருந்ததா என்றால் இல்லை. எனக்கு பிரதிவாதியை தெரியவே தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு போஸ் என்பவரை தெரியுமா என்றால் அவர் எங்களுக்கு பொது நண்பர் ஆவார். எனக்கும் போஸ் என்பவருக்கும் என்ன உறவு முறை என்றால் பார்க்கும் போது பேசுவோம். எங்களுக்கிடையே Business Transaction எதுவும் கிடையாது. நானும் போஸ் என்பவரும் சேர்ந்து அசையா சொத்து எதுவும் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கவில்லை. நான் போஸ் என்பவருடன் ஒரு அசையா சொத்தை வாங்கி அதை நான் அதிக விலைக்கு விற்றுள்ளேன் என்று சொன்னால் அது போல் நான் எதுவும் வாங்கவில்லை. நான் பிரதிவாதிக்கு எவ்வளவு தொகை transfer செய்துள்ளேன் என்றால் ரூ.47,50,000/- transfer செய்துள்ளேன். எதற்காக அவ்வளவு தொகை transfer செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி ஊனமுற்றவர், அவரது கடையை விரிவு படுத்த வேண்டுமென்று கேட்டதால் கொடுத்தேன். மேற்படி ரூ.47,50,000/- கொடுத்ததற்கு ஏதாவது ஆவணம் எழுதி வாங்கினேனா என்றால் எந்த ஆவணமும் எழுதி வாங்கவில்லை. பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னுடைய வங்கி கணக்கு Transaction குறித்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். என் வழக்குரையில் பிரதிவாதிக்கு கொடுத்த தொகையில் பாதி தொகையை கொடுத்து விட்டார் என்று சொல்லியுள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ரூபாய் 14 லட்சத்து சொச்சம் திருப்பி செலுத்தியுள்ளார். அதற்கான வங்கி கணக்கு

Transaction குறித்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி என்னிடம் எந்த பணமும் கடனாக வாங்கவில்லை என்றால் சரியல்ல, வாங்கியுள்ளார். நான் Statement-ல் குறிப்பிட்டுள்ள தொகையானது போஸ்-க்கு கொடுத்த தொகை என்று சொன்னால் சரியல்ல. போஸிற்கும் அந்த தொகைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு உடனடியாக ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் பிரதிவாதி என் வீட்டிற்கு இரண்டு முறை வந்து புதிதாக 2 கடை ஆரம்பித்துள்ளதாகவும், சீக்கிரமாக பணத்தை திருப்பி கொடுப்பதாக கால அவகாசம் கேட்டார், அதனால் உடனடியாக வழக்கு தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கு பண பரிவர்த்தனைக்காக போடப்பட்ட வழக்கு இல்லை என்றும், எனக்கும், போஸிற்கும் இடையில் உள்ள Transaction இருப்பதால் தான் தாமதமாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் O.S.No.234/2019 D.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளா் திரு.D.கோவா்த்தனகிரி, என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயா் | சுரேஷ்குமாா் | தொழில் |
| த.பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை - 01.11.2022**

நான் இந்த வழக்கின் பிரதிவாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். ஆவணங்கள் குறியீடு இல்லை.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

(வாதி தரப்பு வழக்கறிஞா் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**O.S.No.234/2019** **D.W.1-சுரேஷ்குமார்** **19.12.2022.**

<u>**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

வாதி அனந்தகிருஷ்னை எனக்கு எப்பொழுது தெரியும் என்றால் வாதி போஸ் என்பவரின் நண்பர் ஆவார். போஸ் என்பவரின் மூலமாக தான் வாதியை எனக்கு தெரியும். வாதியை எனக்கு 2013ம் ஆண்டிலிருந்து தெரியும். போஸ் எனது நண்பர் ஆவார். எனது எதிருரையில் வாதியின் வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பு வா.சா.ஆ.3 வந்த பிறகு தான் 2017ம் ஆண்டிற்கு பிறகு தான் வாதியை தெரியும் என்று சொல்லியிருப்பதில் எது சரியானது என்றால் 2013ம் ஆண்டிலிருந்தே வாதியை எனக்கு தெரியும். வாதி நான் கேட்கும் போது கடனாக எனக்கு பணம் கொடுத்துள்ளார் என்றால் நான் வாதியிடம் கடன் வாங்கவில்லை, போஸ்சிற்கு கொடுக்க வேண்டிய பணத்தை எனக்கு கொடுத்தார். நான் அந்த பணத்தை என்னுடைய காசோலை பயன்படுத்தி போஸ்சிற்கு எடுத்து கொடுத்தேன். வாதி கணக்கிலிருந்து என்னுடைய வங்கி கணக்கிற்கு பணம் வந்தது என்றால் சரிதான். நான் என்னுடைய வங்கி கணக்கிலிருந்து அந்த பணத்தை போஸ்சிற்கு காசோலை மூலம் கொடுத்துள்ளேன் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. போஸ் உடைய பணமானது வாதியிடமிருந்து என்னுடைய வங்கி கணக்கிற்கு எவ்வளவு பணம் வந்தது என்றால் சுமார் ரூ.1,20,00,000/- எனது வங்கி கணக்கிற்கு வந்தது. போஸ்சிற்கு கொடுக்க வேண்டிய பணம் என்னுடைய வங்கியின் மூலம் கொடுக்க வேண்டிய அவசியம் என்னவென்றால் போஸ் உடைய வங்கி கணக்கானது freeze செய்யப்பட்டதால் என்னுடைய வங்கி கணக்கிற்கு வாதி அனுப்பியிருந்தார். போஸ்க்கு கொடுக்க வேண்டிய பணத்தை எனது வங்கி கணக்கிற்கு போடுமாறு போஸ் ஏதாவது எழுத்து மூலமாக கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை. நான் வருமான வரி தாக்கல் செய்கிறேனா என்றால் தாக்கல் செய்கிறேன். வருமான வரி ரிட்டன்ஸ்யை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. போஸ் என்பவர் எனக்காக சாட்சி சொல்ல வருவாரா என்றால் சாட்சி சொல்ல வருவார். நானும் வாதியும் நண்பர்கள் என்பதால் என்னுடைய வங்கி கணக்கில் அந்த பணத்தை மறுக்க முடியாது என்ற காரணத்தினால் போஸிற்கு கொடுக்க வேண்டிய பணம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் என்னுடைய வங்கி கணக்கில் போஸிற்காக போடப்பட்ட பணம் என்று வாதியிடமிருந்து ஏதாவது எழுதி

வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. மேற்படி பண பரிவர்த்தனைக்கு எனக்கு ஏதாவது கமிஷன் உண்டா என்றால் இல்லை. என்னுடைய வங்கி கணக்கில் ரூ.1,20,00,000/-க்கு எவ்வளவு வருமான வரி கட்டினேன் என்றால் நான் 12 லட்சத்திற்கு வருமான வரி கட்டினேன். வாதி எனக்கு கொடுத்த பணத்தை நான் திரும்ப கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் O.S.No.234/2019 D.W.2**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.V.பிரதாப், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | சந்திரபோஸ் | தொழில் |
| த.பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை - 03.09.2024**

நான் இந்த வழக்கில் மூன்றாம் தரப்பினர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 4 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். அவற்றை பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. Ex.B.1 - Memorandum of under standings dated 07.01.2014.
2. Ex.B.2 - Memorandum of under standings dated 15.06.2015.
3. Ex.B.3 - Courier Cover.
4. Ex.B.4 - Letter from Anantha Krishnan to Chandra Bose.

(பி.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டு, ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நானும் பிரதிவாதியும் நண்பர்கள் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் எம்.ஏ. படித்துள்ளேன். எனக்கு இந்த வழக்கு குறித்து தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி என்ன எதிர் வழக்குரை போட்டுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் என் மனைவி பெயரில் கான்ட்ராட்க் எடுத்து வியாபாரமும், ரியல் எஸ்டேட் தொழிலும் செய்கிறேன். அ.மு.மு.க கட்சியில் இருக்கிறேன் என்றால் சரிதான். வேளச்சேரி சட்ட மன்ற தொகுதியில் 2021ம் ஆண்டில் எம்.எல்.ஏக்கு நின்றேன் என்றால் சரிதான். நானும் என் மனைவியும் வருமாரி வரி கட்டி வருகிறோம் என்றால் சரிதான். நான் 2021ல் எம்.எல்.ஏக்கு நின்ற போது நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரம் மற்றும் அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் நான் தாக்கல் செய்ததுதான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை சாட்சி ஒப்புக்கொண்டதால் அந்த ஆவணத்தின் Online நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் பத்தி 4ல் வாதிக்கு பணம் கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் நான் அனந்தகிருஷ்ணனின் தொழிலுக்காக பணம் கொடுத்தேன். வாதிக்கு கொடுத்த பணத்தை வேறொரு நபரிடமிருந்து வெளியில் வாங்கிக் கொடுத்தேன். அவ்வாறு நான் வாதிக்கு எந்த தேதியில், எவ்வளவு தொகை, யாரிடமிருந்து வாங்கிக் கொடுத்தேன் என்று குறிப்பிட்டு எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் தற்போது பணம் கொடுத்த தேதி ஞாபகமில்லை. நான் கொடுத்த பணத்திற்கு வருமான வரி கட்ட வேண்டுமென்றால் நான் வாதிக்கு கொடுத்த பணம் என்னுடையதல்ல என்பதால் வருமான வரி தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு வெளியிலிருந்து பணம் வாங்கிக் கொடுத்தேன் என்பதற்கான எழுத்து மூலமான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 2016-2017, 2017-2018, 2018-2019, 2019-2020, 2020-2021ல் வருமான வரி கட்டியதற்கான விவரங்களை குறிப்பிட்டு நான் எம்.எல்.ஏ. பதவிக்கு நின்றபோது கொடுத்த விவரங்களை வா.சா.ஆ.4ல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் குறிப்பிட்டுள்ளேன். வா.சா.ஆ.4ல் என் மனைவியின் வருமான விவரங்களையும் காண்பித்துள்ளேன் என்றால் காண்பித்துள்ளேன். வா.சா.ஆ.4ல் 2016 முதல் 2021 வரை வருட

வருமான நிலைகள் ரூபாய் 6 லட்சத்திற்கு மேல் செல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு வங்கியில் பிரச்சனை இருந்ததாகவும், அதனால் வாதியை பிரதிவாதியின் வங்கி கணக்கில் பணத்தை போடுமாறு நான் சொன்னதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய வங்கி கணக்கு புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் வங்கி கணக்கில் பிரச்சனை இருந்தது குறித்து வங்கி கடிதம் ஏதாவது கொடுத்தார்களா அல்லது குறுஞ்செய்தி ஏதாவது அனுப்பினார்களா என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்கள் குறித்து பிரதிவாதி அவரது எதிர் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் எனக்கு அது குறித்து தெரியவில்லை. எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க சம்மன் வந்ததா என்றால் தெரியாது. என்னை சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு யார் அழைத்து வந்தார்கள் என்றால் பிரதிவாதிதான் அழைத்து வந்தார். பி.சா.ஆ.1 ஆவணத்தை சாட்சி பார்த்து அந்த அக்ரிமெண்ட் என்னுடையதில்லை என்று கூறினார். பி.சா.ஆ.1 ஆவணத்தில் எனது கையெழுத்து இல்லை என்றால் இல்லை. பி.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சிகள் என்ற இடத்திலும் கையெழுத்து எதுவுமில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தின் முதல் பக்கத்தில் உள்ள கையெழுத்திற்கும், 2வது பக்கத்தில் உள்ள கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் எனக்கு அது குறித்து தெரியவில்லை. பி.சா.ஆ.1 ஆவணத்தை குறித்து எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை. 07.01.2014 அன்று ரொக்கமாக ரூபாய் 10 லட்சம் வாதிக்கு கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் பி.சா.ஆ.1 ஆவணத்தில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது, ஆனால் அது குறித்து தற்போது எனக்கு ஞாபகமில்லை. 07.01.2014 அன்று நான் ரூபாய் 10 லட்சம் ரொக்கமாக வைத்திருந்தேன் என்பதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியவில்லை. 01.02.2014 அன்று காசோலை மூலம் ரூபாய் 13 லட்சம் கொடுத்ததாக பி.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அதில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. நான் ரூபாய் 13 லட்சத்தை காசோலை மூலமாக கொடுத்தேன் என்பதற்கு வங்கியின் கணக்கு பட்டியல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் காசோலை கொடுத்தேனா என்று எனக்கு ஞாபகமில்லை.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.1 ஆவணத்தில் ரூபாய் 13 லட்சம் அசல் தொகையையும், ரூபாய் 7 லட்சம் Fixed profit share-யையும் சேர்த்து 4 மாதத்திற்குள் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சாட்சி பி.சா.ஆ.1 ஆவணத்தை பார்த்து தற்போது ஞாபகமில்லை என்று கூறுகிறார். வாதி 4 மாதத்திற்குள் பணம் கொடுத்தாரா கொடுக்கவில்லையா என்றால் ஞாபகமில்லை. வாதி எனக்கு 4 மாதத்திற்குள் பணம் கொடுத்தார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் ஞாபகமில்லை. வாதி எனக்கு 4 மாதத்திற்குள பணம கொடுக்கவில்லை என்பதற்கு ஏதாவது எழுத்து மூலமான அறிவிப்பு கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. பி.சா.ஆ.1 ஆவணத்தில் 07.08.2014 அன்று ரூபாய் 10 லட்சம் அசல் தொகையையும், ரூபாய் 8 லட்சம் Fixed profit share-யையும் சேர்த்து ரூபாய் 18 லட்சத்தை ரொக்கமாக 7 மாதத்திற்குள் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது என்றால் பி.சா.ஆ.1 ஆவணத்தில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு வாதி எனக்கு 7 மாதத்திற்குள் பணம் கொடுத்தார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் ஞாபகமில்லை. வாதி எனக்கு 7 மாதத்திற்குள் பணம் கொடுக்கவில்லை என்பதற்கு ஏதாவது எழுத்து மூலமான அறிவிப்பு கொடுத்தேனா என்றால் அது குறித்து எனக்கு ஞாபகமில்லை. நான் வாதிக்கு பணம் கொடுப்பதற்கு பணம் வைத்திருந்தேன் என்பதற்கு வங்கி கணக்கு ஆவணம், வருமான வரி கணக்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளனோ என்றால் அது குறித்து ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் பத்தி 3ல் நானும், வாதியும் கூட்டாக ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தோம் என்று சொல்லியுள்ளதில், அவ்வாறு கூட்டாக ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை பத்தி 3ல், நான் வாதி பெயரில் சொத்து வாங்கியதாக சொல்லியுள்ளதற்கு எழுத்து மூலமான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பி.சா.ஆ.1 ஆவணத்தில் வாதிக்கு நான் Finance for project-க்காக பணம் கொடுத்ததாக்லப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. எனக்கு, வாதி ரூபாய் ஒரு கோடி தர வேண்டுமென்றும், அதனை வாதி, பிரதிவாதியின் வங்கி கணக்கிற்கு அனுப்பி அந்த தொகையை அவர் எனக்கு கொடுத்து

விட்டதாக பிரதிவாதி எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றும், அவ்வாறு பண பரிவர்த்தனைகள் செய்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. பி.சா.ஆ.1 ஆவணத்தில் ரூபாய் ஒரு கோடி வாதி தரவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஞாபகமில்லை. பி.சா.ஆ.1 ஒப்பந்தத்தில் இருதரப்பினரும் கையெழுத்து இடவேண்டுமென்றும், ஒருவர் மட்டும் கையெழுத்து போட்டுள்ளதால் அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 ஆவணத்தில் இரண்டு நபர்களும் கையெழுத்து போடவேண்டுமென்றும், ஒரு நபர் மட்டும்தான் கையெழுத்து போட்டுள்ளார் என்றும், நான் கையெழுத்து போடவில்லை என்றும் சொன்னால் நான் கையெழுத்து போடவில்லை. பி.சா.ஆ.2 ஆவணத்தில் சாட்சிகள் என்ற இடத்திலும் யாரும் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஆவணமும் Finance for project-க்காக பணம் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. பி.சா.ஆ.2 ஆவணத்தில் நான், வாதிக்கு ரூபாய் 25 லட்சம் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு டைப் செய்யப்பட்டுள்ளது, ஆனால் அதில் என் கையெழுத்து இல்லை. வாதி ரூபாய் 25 லட்சத்திற்காக ஒரு காசோலை எண்.000011-யை செக்கியூரிட்டிக்காக கொடுத்துள்ளார் என்றால் ஒரு காசோலை கொடுத்ததாக ஞாபகமில்லை. பி.சா.ஆ.2 ஆவணத்தில் Kotak வங்கியின் காசோலை கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிக்கு ரூபாய் 25 லட்சம் கொடுத்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி காசோலையானது 15.06.2015 பி.சா.ஆ.2 ஆவணம் எழுதப்பட்ட அன்று கொடுக்கப்பட்டதா என்றால் ஞாபகமில்லை. பி.சா.ஆ.2 ஆவணத்தில் அதே காசோலையை 22.10.2024 அன்று எனக்கு கொடுத்ததாக அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அறிவிப்பில் அவ்வாறு சொல்லியுள்ளேன். தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படும் 25.11.2024 அன்று வாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புதான் என்றால் சாட்சி அந்த அறிவிப்பு தான் அனுப்பிய அறிவிப்பு என்று ஒப்புக் கொண்டதால் 25.11.2024 தேதியிட்ட அறிவிப்பு வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.06.2015 அன்று கொடுக்கப்பட்ட காசோலையை பின் தேதியிட்டு 22.10.2024 தேதி அன்று போலியாக தயார் செய்துள்ளேன் என்றால்

அதுபோல் இல்லை. வாதி கொடுத்த காசோலையை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.5 அறிவிப்பில் எந்த நோக்கத்திற்காக பணம் கொடுக்கப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லவில்லை. வா.சா.ஆ.5 அறிவிப்பிற்கு வாதி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. வாதி பதில் அறிவிப்பு அனுப்பியதாக என் வழக்கறிஞர் சொன்னார். பி.சா.ஆ.2ல் ரூபாய் 25 லட்சம் அசல் தொகையும், profit share ரூபாய் 3,75,000/- கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. பி.சா.ஆ.2ல் மேற்படி தொகையை 3 மாதத்திற்குள் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. பி.சா.ஆ.2ல் சொல்லப்பட்டுள்ளவாறு வாதி 3 மாதம் கழித்து பணம் கொடுத்தாரா என்றால் ஞாபகமில்லை. 3 மாதம் கழித்து வாதி பணம் கொடுக்கவில்லை என்று அறிவிப்பு எதுவும் கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. பி.சா.ஆ.4 வாதி எழுதியதாக சொல்லும் கடிதம் என்றால் சரிதான். பி.சா.ஆ.4 கடிதத்தில் தேதி, மாதம், வருடம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. பி.சா.ஆ.4 கடிதத்தில் 1 முதல் 3 பக்கத்தில் கையெழுத்து இல்லை என்றால் 1 முதல் 3 பக்கத்தில் கையெழுத்து இல்லை, 4வது பக்கத்தில் கையெழுத்து உள்ளது. பி.சா.ஆ.1, பி.சா.ஆ.2 மற்றும் பி.சா.ஆ.4 ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்களில் வித்தியாசம் உள்ளது என்றால் வித்தியாசம் உள்ளது. பி.சா.ஆ.4 கடிதத்தை வாதி அனுப்பினார் என்று எனது பிரமாண வாக்குமூலத்திலேயோ, பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையிலோ சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லியிருக்கிறேன். 05.03.2022 அன்று பதிவு தபால் அனுப்பப்பட்ட கடிதத்தின் உறை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் 2023ல் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 05.03.2022 அன்று வாதி எனக்கு ஒரு கடிதம் அனுப்பினார் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் அது குறித்து என் வழக்கறிஞருக்குதான் தெரியும். பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.4 ஆவணங்களை குறித்து பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் அது குறித்து என் வழக்கிறஞருக்குதான் தெரியும். பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.4 ஆவணங்களை குறித்து என் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆவணங்களை என்

வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். அந்த ஆவணங்களை என் பிரமாண வாக்குமூலத்தில் சேர்த்தாரா என்று என் வழக்கறிஞருக்குதான் தெரியும். நான் வாதிக்கு பணம் கொடுத்ததற்கான வருமான வரி கணக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. நானும், பிரதிவாதியும் வாதிக்கு கொடுக்கவேண்டிய பணத்தை ஏமாற்ற வேண்டுமென்பதற்காக போலியான ஆவணங்களை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு கொடுக்க வேண்டிய பணத்தை ஏமாற்ற வேண்டுமென்ற கெட்ட நோக்கத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை